2018 ஜூலை 9] [பேரவைத் தலைவர்]

உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் நடவடிக்கைக் குறிப்புகளைக் கணினிமூலம் இணையதளம் வழியாகப் பார்வையிட ஏதுவாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் இணையதளத்தில் வெளியிடும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் ஆகியோர் முன்னிலையில் 27–5–2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது. அந்நிகழ்வில் முதற்கட்டமாக பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையின் 25–5–2016 முதல் 16–3–2017 வரையிலான 43 நாட்களுக்கான பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக இன்று (9–7–2018) 20–3–2017 முதல் 19–7–2017 வரையிலான 29 நாட்களுக்கான சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் வசதிக்காக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

“காகிதமில்லா சட்டமன்றம்” என்ற இலக்கை அடையும்வண்ணம், சட்டமன்றப் பேரவைச் செயலகத்தால் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. படிப்படியாக காகிதப் பயன்பாடு குறைக்கப்பட்டு, விரைவில் “காகிதமில்லா சட்டமன்றம்” என்ற இலக்கு எட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

8. கவன ஈர்ப்பு

(அ) நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்கு நிலம் வழங்கியவர்களுக்கு இழப்பீடு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வெ. கணேசன், திரு. சபா. ராசேந்திரன் மற்றும் திரு. துரை. கி. சரவணன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்*

கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்கு நிலம் வழங்கியவர்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

1. என்.எல்.சி. இந்தியா நிறுவனத்திற்கு தற்போது நடைமுறையில் உள்ள தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம் 10/1999–ன்படி நில எடுப்பு செய்யப்பட்டு வருகிறது. என்.எல்.சி. இந்தியா நிறுவனத்தைப் பொறுத்தவரையில் நில எடுப்பு அலுவலர், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவார். என்.எல்.சி. இந்தியா நிறுவனத்தாரால் செய்யப்படும் நில எடுப்பால் பாதிக்கப்படும் விவசாயிகள் தங்களது வீடு, நிலம், கடைகள் மற்றும் இதர சொத்துகளையும் ஒட்டுமொத்தமாக இழக்க நேரிடுவதால், அதன் அடிப்படையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேசிய மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற கொள்கை 2007–ன்படி என்.எல்.சி. இந்தியா நிறுவனத்தின்மூலம் நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்காணும் கொள்கையின்படி இத்திட்டத்தின் “நிருவாகி” (Administrator) கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவார். [தேசிய மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற கொள்கை 2007 அத்தியாயம் 3.1(a)].

நில எடுப்பிற்கான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்ட விவரம்

1.	நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கு 2006 ஆம் ஆண்டு முதல் 31–3–2018 வரை கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் மொத்தப் பரப்பளவு	1,427 ஹெக்டேர்

2018 ஜூலை 9] [திரு. பி. தங்கமணி]

2.	நில உடைமையாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் தீர்ப்பு வழங்கப்பட்ட வகையில் நில உடைமையாளர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை	ரூ.91.11 கோடி
3.	மக்கள் நீதிமன்றம்மூலம் வழங்கப்பட்ட நிவாரணத் தொகை	ரூ.114.48 கோடி
	ஆக கூடுதல்	ரூ.205.59 கோடி

தேசிய மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற கொள்கை 2007–ன்படி சலுகைகள் வழங்கப்பட்ட விவரம்

1.	நில எடுப்பால் பாதிக்கப்பட்ட நில உடைமையாளர்களுக்கு மாற்று குடியமர்த்தப்பட்ட வகையில் வழங்கப்பட்ட மனைகள் (தேசிய மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற கொள்கை 2007, அத்தியாயம் 7.2)	2,733 மனைகள்
2.	மாற்று குடியமர்த்தப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்ட (Resettlement) நிவாரணம் (தேசிய மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற கொள்கை 2007, அத்தியாயம் 7.11)	ரூ.184.75 இலட்சம்
3.	பிழைப்பூதியப் படிகள் (Shifting allowance) (தேசிய மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற கொள்கை 2007, அத்தியாயம் 7.16)	ரூ.394.56 இலட்சம்
4.	மாட்டுக் கொட்டகைகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் (தேசிய மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற கொள்கை 2007, அத்தியாயம் 7.10)	ரூ.0.30 இலட்சம்
5.	அரசு நிலங்களில் குடியிருந்து வந்தவர்களுக்கு வழங்கப்பட்ட கருணைத் தொகை (தேசிய மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற கொள்கை 2007, அத்தியாயம் 7.3)	ரூ.349.52 இலட்சம்

[திரு. பி. தங்கமணி] [2018 ஜூலை 9

6.	நிலம் கையகப்படுத்தப்பட்ட நில உடைமையாளர்களை மாற்றுக் குடியிருப்பில் குடியமர்த்திய வகையில் அடிப்படை வசதிகள் உள்ளிட்ட வசதிகளை செய்து கொடுத்ததற்கான தொடர் செலவினம்	ரூ.25 முதல் 30 இலட்சம் மட்டில் (ஒரு ஆண்டுக்கு)
7.	வேலைவாய்ப்புக்காக ஒருமுறை பணப்பயன் வழங்கும் திட்டம்	ரூ.100.74 இலட்சம்
8.	திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தாருக்கு நிருவாகத்தால் பட்டய பயிற்சி வழங்கப் பெற்றவர்கள் (சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்பட்டவர்கள்)	90 நபர்கள்
9.	திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தாருக்கு ITI அடிப்படை தொழிற் பயிற்சி வழங்கப் பெற்றவர்கள்	950 நபர்கள்
10.	அடிப்படை திட்டப் பயிற்சி (பட்டப் படிப்பு–94) (பட்டயப் படிப்பு–47)	141 நபர்கள்
11.	ஒப்பந்தத் தொழிலாளர்களாக பணிபுரிந்து வருபவர்கள்	3,500 நபர்கள்
12.	மருத்துவத் துறையில் ஆய்வக உதவியாளராக பயிற்சி பெற்றவர்கள்	63 நபர்கள்
13.	திறன் மேம்பாடு மற்றும் சுய தொழில் பயிற்சியினை சிறந்த பயிற்சியாளர் வழியே பெற்றவர்கள்	1,543 நபர்கள்

2. மேலும், மத்திய அரசின் புதிய நில எடுப்புச் சட்டம், 30/2013–ன்படி 1–1–2014 முதல் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் இனங்களுக்கு புதிய நில எடுப்புச் சட்ட விதிகளின்படி இழப்பீட்டுத் தொகை மற்றும் தேசிய மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற கொள்கைகளின்படி இழப்பீட்டுத் தொகைகள் வழங்கப்பட உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

முற்பகல் 11–35

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். நெய்வேலி, NLC நிறுவனத்திற்கு நில எடுப்பு அலுவலராகவும் மற்றும் நிருவாகியாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இருந்து வருகிறார்கள். அவருடைய சில தகவல்களை அறிக்கையாகக் கொடுத்திருக்கிறார்கள். அவ்வறிக்கையில், நில எடுப்புச் சட்டம், 2014–ன்படி, 1–1–2014–க்குப் பிறகு நிலம் கொடுத்தவர்களுக்கு அந்தச் சட்டத்தின்படி Rehabilitation and Resettlement policy–யும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். அங்கு நிலம், வீடுகள் கொடுத்த விவசாயிகள் மற்றும் பொது மக்களின் கோரிக்கை என்னவென்றால், நெய்வேலி நிறுவனத்தாரால் நிலம் பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்பாக, உரிய நிவாரணங்கள், இழப்பீடுகள், பயன்கள் மற்றும் வாய்ப்புகளை R.R. Policy–யின் அடிப்படையில் அவர்களுக்கு முன்பாகவே கொடுத்துவிட்டால் பயனுள்ளதாக இருக்கும். அங்கு ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படுவதற்கும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், 2014 ஆம் ஆண்டிற்கு முன்பு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், ஒரு கேள்வி கேளுங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவார்; அல்லது 2 கேள்விகளையும் ஒன்றாகக் கேட்டுவிடுங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டிற்கும் ஒன்றாகவே பதில் சொல்லட்டும். விவாதத்திற்கு மேற்கொண்டு அதிக நேரம் எடுக்க முடியாது.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014–க்கு முன்பு நிலம் அளித்தவர்களுக்கும் இதே சட்டத்தின்படி இழப்பீடு வழங்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். தற்போது அங்கு சமீபகால நில எடுப்புச் சட்டத்தின்படி, 4 மடங்கு இழப்பீடு வழங்கப்படுகிறது. தற்போது சந்தை மதிப்பு 6 இலட்சம் என்று இருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது ஒரு ஏக்கர் நிலத்திற்கு 24 இலட்சம் ரூபாய் இழப்பீடாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பது அங்கிருக்கின்ற விவசாயிகளின் கோரிக்கையாக இருக்கிறது. இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1–4–2014–க்கு முன்பாக நிலம் அளித்தவர்களுக்கும் இந்தச் சட்டத்தின்படி இழப்பீடு வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றார்கள். ஒரு சட்டம் இயற்றும்போது, அந்தச் சட்டம் இயற்றப்பட்ட பின்னால் வருபவற்றுக்குத்தான் அந்தச் சட்டத்தின்படி இழப்பீடு கொடுக்க முடியுமேயொழிய, ஏற்கெனவே எடுத்த நிலங்களுக்கெல்லாம் அந்த மதிப்பீட்டின்படி இழப்பீடு கொடுக்க முடியாது என்பது முதல் கருத்து. இரண்டாவதாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் புதிய சட்டத்தின்படி 4 மடங்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார். NLC நிருவாகம் அதற்கு ஒப்புக்கொண்டிருக்கின்றது. மாவட்ட ஆட்சியாளர்தான் அதற்கு நிருவாக அலுவலராக இருக்கின்றார். இதுகாறும் முன்பணமாக 13¾ கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார். NLC நிறுவனம் நிலத்தை கையகப்படுத்தி முழுமையாகப் பயன்படுத்துவதற்கு முன்பாக அவர்களுக்கு அந்த முழு இழப்பீட்டுத் தொகையைத் தர வேண்டும் என்று கோரியிருக்கின்றார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் சென்று அந்த நிருவாகத்தோடு கலந்து பேசி, அதுபோன்ற ஒரு சுமுக நிலையை எட்ட ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் 2 கேள்விகளையும் கேட்டுவிட்டீர்கள் என்று நினைத்தேன். சரி, கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான பிரச்சினை நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருக்கின்றது. 2017 ஆம் ஆண்டில் அப்போதைய தொழில் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் ஒரு முத்தரப்புக் கூட்டத்தை நடத்தி இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்று தெரிவித்தார்கள். அந்த முத்தரப்புக் கூட்டத்தை உடனடியாகக் கூட்டி, அங்கு நிலம் கொடுத்தவர்களுக்கு

2018 ஜூலை 9] [*திரு. சபா. ராசேந்திரன்*]

வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். மாற்று மனை வழங்கிய நிலங்களுக்கான பட்டா வழங்கப்படாமல் இருக்கின்றன. அதற்கான தீர்வையும் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், NTPC என்ற பொதுத் துறை நிறுவனம் ஒரு Rehabilitation and Resettlement policy–ஐ தனியாக வகுத்திருக்கிறது. வருடந்தோறும் தொடர்ந்து நிலம் எடுத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தால், NLC–க்கும் அதுபோல் ஒரு Rehabilitation and Resettlement policy–ஐ நிலம் கொடுத்தவர்களுக்கு பயன் அளிக்கும் வகையில் உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், நிலம் ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயன்படுத்தப்படாமல் இருக்கும் நிலத்தை அந்த விவசாயிகளுக்கு மீண்டும் கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும், அதை அரசு செய்யுமா என்பதையும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழில் துறைச் செயலாளர் அவர்களோடு முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். விவசாயிகளினுடைய நலனைக் காக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதை உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதுபோன்ற ஒரு கூட்டத்தைக் கூட்டி, விவசாயிகளுக்கு இழப்பீட்டைத் தருவதற்கு முழு ஒத்துழைப்புக் கொடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், மத்திய அரசு நிறுவனமான அந்த நிறுவனத்திற்கு மத்திய அரசின் கொள்கையின் அடிப்படையில்தான் விலை நிர்ணயம் செய்ய முடியும். வேறு ஒரு நிறுவனத்திற்குக் கொடுக்கின்ற Rehabilitation and Resettlement Policy–ன்படி இதற்கு நாம் இழப்பீடு வழங்க முடியாது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். இருந்தாலும், அதை கவனத்தில் எடுத்துக்கொண்டு*

[திரு. பி. தங்கமணி] [2018 ஜூலை 9

அந்நிறுவனத்துடன் கலந்து பேசி, இதுபோன்று பிற நிறுவனங்கள் இழப்பீடு தருகின்றன, அதனால் நீங்களும் அதற்கு முன்வர வேண்டும் என்ற கோரிக்கை உங்கள் சார்பாகவும், விவசாயிகள் சார்பாகவும், அரசின் சார்பாகவும் அந்நிறுவனத்திற்கு வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வட்டத்தைப் பிரித்து இராயக்கோட்டை வட்டம் உருவாக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.

திரு. பி. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், "வேப்பனஹள்ளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வட்டத்தைப் பிரித்து இராயக்கோட்டை வட்டம் உருவாக்க வேண்டியது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள தேன்கனிக்கோட்டை வட்டத்தைப் பிரித்து அஞ்செட்டியை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் அமைத்திட முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே, மீண்டும் தேன்கனிக்கோட்டை வட்டத்தைப் பிரித்து இராயக்கோட்டையை தலைமையிடமாகக் கொண்டு உத்தேசிக்கப்படும் வட்டத்திற்கு